## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 101/2022

நாள் 24.02.2026

PW1 – ஹரிகிருஷ்ணன்

த/பெ – சுப்பிரமணியம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026)**

**குறுக்கு விசாரணை**

1. நான் தாவா சொத்துக்களில் பொதுவில் 1/4 பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வீடு, காலிமனை, நகை, பணம் ஆகியவைகளில் பாகம் கேட்டுள்ளேன். 1,2 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்த சகோதரர்கள், 3–ம் பிரதிவாதி எனது தாயார் ஆவார். தற்போது எனது தாயார் 3–ம் பிரதிவாதியை எனது சகோதரர் 1–ம் பிரதிவாதி தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான், தனியாக வீடு எடுத்து வைத்து பராமரித்து வருகிறார். எனது தாயாருக்குரிய மருத்துவ செலவினங்களை 1–ம் பிரதிவாதி தான் பார்த்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது 1–ம் பிரதிவாதிக்கும் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் 1,2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்து கொள்வதில் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தாவாவில் 3–வது அயிட்ட சொத்தாக சொல்லப்பட்டுள்ள பணம் மற்றும் நகைகள் எதுவும் கிடையாது என்றும், இந்த வழக்கிற்காக வேண்டி ரூ.7,00,000/– பணமும் மற்றும் 25 சவரன்

தங்க நகையும் இருப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1–ம் அயிட்ட சொத்தை பொறுத்து 2,3 பிரதிவாதிகள் இருவரும் 1–ம் பிரதிவாதிக்கு என்னிடம் காட்டப்படும் கடந்த 11.01.2023–ம் தேதியிட்ட பதிவு பாக பாத்திய விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த **11.01.2023–ம் தேதியிட்ட பதிவு பாக பாத்திய விடுதலை ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. எனது தாயார் ராஜம்மாள் எனது மனைவி மற்றும் இருமகள்கள் மீது கடந்த 12.10.2022–ம் தேதியில் அவரது நகை 1–3/4 பவுன் நகையை எடுத்து சென்று விட்டதாக சொல்லி புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான், அது பொய் புகார். அந்த புகாருக்கு காவல் நிலையத்தார் கொடுத்த ரசீது தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த **12.10.2022–ம் தேதியிட்ட புகார் மனு ரசீது நகல் பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டது. 1–ம் பிரதிவாதியின் மனைவி என் மீது புகார் கொடுத்ததின் பேரில் என்னிடம் காட்டப்படும் அவிநாசி காவல் நிலைய குற்ற எண்.319/2022 பிரிவுகள் 294(b), 323 இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடைசட்டத்தின் படி குற்ற வழக்கு என் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த **அவிநாசி காவல் நிலைய குற்ற எண்.319/2022–ன் முதல் தகவல் அறிக்கை நகல் பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த வழக்கு இன்னும் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எங்களது தரப்பில் கொடுக்கப்பட்ட குற்ற வழக்கும் நிலுவையில் தான் உள்ளது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படும் ராதாகிருஷ்ணன் என்பவர் எனது நண்பர். தாவா 2–ம் அயிட்ட சொத்தை பொறுத்து நான் எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின் பேரில் அ.வ.எண்.103/2022 என்ற வழக்கு ராதாகிருஷ்ணன் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நடந்து வருகிறது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. நான் சொல்வது பொய் என்றும், தாவா 2–ம் அயிட்ட சொத்தை பொறுத்து வில்லங்கப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் எனது நண்பர் ராதாகிருஷ்ணன் மூலம் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொத்துக்கள் ஒதுக்குவதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். தாவா 1–ம் அயிட்ட சொத்தில் உள்ள வீட்டில் நான் மட்டும் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா 1–ம் அயிட்ட வீட்டில் பிரதிவாதிகளை உள்ளே விடாமல் பிரச்சனை செய்துவிட்டு நான் மட்டும் அந்த வீட்டில் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.24 15:01:08 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**